முதல்வர் ஜோசப் விஜய்யுடன் தொல்.திருமாவளவன் சந்திப்பு

சென்னை, ஆக.18: முதல்வர் ஜோசப் விஜய்யை விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்புக்குப் பின்னர் சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் தொல்.திருமாவளவன் கூறியதாவது:

தவெகவுடன் விசிக இணைந்து 100 நாள்கள்தான் ஆகின்றன. தொடர்ந்து அவர்களுடன் இணைந்து பயணிப்போம் என்பதை மாநாட்டிலும் உறுதிப்படுத்தியுள்ளோம். ஆளும் கட்சிகளுடன் இதுவரை பயணித்த நாம், இனி ஆளும் கட்சியாகப் பரிணமிப்போம் என்ற முழக்கமும் மாநாட்டில் முன்வைக்கப்பட்டது.

தற்போது கூட்டணி அரசில் விசிக அங்கம் வகிப்பதன் மூலம் நாமும் ஓர் ஆளும் கட்சி என்ற அடையாளத்தைப் பெற்றுள்ளோம். இது ஒரு வளர்ச்சி; இந்த வளர்ச்சியை தமிழக மக்கள் நமக்கு வழங்கியுள்ளனர்.

அவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப விசிக-வின் அரசியல் நிலைப்பாடு இருக்கும்.

மேகமலை, கோவையில் கல்லூரி மாணவர் அமுதன் கொலை விவகாரங்கள் தொடர்பாக, முதல்வரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதேபோல அரசியல் ரீதியாகவும், சில கருத்துகள் முதல்வருடன் பகிரப்பட்டுள்ளன.

எங்கள் கோரிக்கையை முதல்வர் மிகவும் கவனமாகக் கேட்டுப் புரிந்துகொண்டார். அதன் மீது உரிய நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறோம்.

அமுதன் கொலை விவகாரம் தொடர்பாக சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்க வேண்டும் என முதல்வரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. போதைப் பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த தனியாக ஓர் அதிரடிப்படையை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முதல்வரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

பிரிட்டனில் இருந்து மீட்கப்பட்ட திருமங்கை ஆழ்வார் சிலையைப் பார்வையிட்டார் முதல்வர் ஜோசப் விஜய்

சென்னை, ஆக. 18: பிரிட்டன் நாட்டில் இருந்து மீட்கப்பட்ட கும்பகோணம் சௌந்தரராஜ பெருமாள் கோயிலின் திருமங்கை ஆழ்வார் சிலையை முதல்வர் ஜோசப் விஜய் பார்வையிட்டார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் பிரசித்தி பெற்ற சௌந்தரராஜப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் இருந்து 1957 முதல் 1967 வரையிலான காலகட்டத்தில், திருமங்கை ஆழ்வாரின் வெண்கலச் சிலையும், மூன்று உலோகச் சிலைகளான காளிங்கநர்த்தனர் கிருஷ்ணர், விஷ்ணு, ஸ்ரீதேவி என மொத்தம் 4 சிலைகள் திருடப்பட்டதாக கோயில் செயல் அலுவலரால் கடந்த 2020-ஆம் ஆண்டில் புகார் அளிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், சிலை திருட்டுத் தடுப்புப்பிரிவினரால்மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, திருமங்கை ஆழ்வாரின் வெண்கலச் சிலை பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் ஆஷ்மோலியன் அருங்காட்சியகத்தில் இருப்பது கண்டறியப்பட்டது. இந்தச் சிலையை அந்த அருங்காட்சியகம் 1967-ஆம் ஆண்டு அடையாளம் தெரியாத விற்பனையாளரிடமிருந்து வாங்கியது தெரிய வந்தது.

இதேபோன்று அடுத்தடுத்து நடைபெற்ற தொடர் விசாரணைகளில், அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள ஆசிய கலை அருங்காட்சியகத்தில் காளிங்க நர்த்தனர் உலோகச் சிலையும், ஃபுளோரிடாவிலுள்ள ஹில் ஏலக் காட்சியகத்தில் ஸ்ரீதேவி உலோகச் சிலையும், டெக்சாஸில் உள்ள கிம்பெல் கலை அருங்காட்சியகத்தில் விஷ்ணு உலோகச் சிலையும் இருப்பது கண்டறியப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு உயர் அதிகாரிகள், திருமங்கை ஆழ்வார் வெண்கலச் சிலையின் பூர்வீகம் மற்றும் உண்மையான தோற்றம் தொடர்பான அனைத்து அறிவியல் ஆதாரங்களையும் சேகரித்து, பிரிட்டன் நாட்டு அரசு அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தனர். இந்த ஆதாரங்களை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் கவுன்சில் ஏற்றுக்கொண்டதன் பேரில், திருமங்கை ஆழ்வார் சிலையை மீண்டும் இந்தியாவுக்கு கொண்டு வந்து ஒப்படைப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.



பிரிட்டனில் இருந்து மீட்கப்பட்ட கும்பகோணம் சௌந்தரராஜ பெருமாள் கோயிலின் திருமங்கை ஆழ்வார் சிலையை சென்னை தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை பார்வையிட்ட முதல்வர் ஜோசப் விஜய். உடன், காவல் துறை தலைமை இயக்குநர் மகேஷ்குமார் அகர்வால்.

மீண்டும் நிறுவப்படும்: பின்னர், துரதக நடவடிக்கைகளின் மூலம் ஆஷ்மோலியன் அருங்காட்சியகத்தின் பாதுகாப்பில் உள்ள திருமங்கை ஆழ்வார் வெண்கலச் சிலை தமிழகத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஆக. 16) கொண்டுவரப்பட்டது. மீட்கப்பட்ட இந்த திருமங்கை ஆழ்வார் வெண்கலச் சிலையை முதல்வர் விஜய்யிடம், காவல் துறை தலைமை இயக்குநர் மகேஷ்குமார் அகர்வால், கூடுதல் காவல் துறை இயக்குநர் (சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு) டி.கல்பனா நாயக் ஆகியோர் செவ்வாய்க்கிழமை காண்பித்தனர். அந்தச் சிலையைப் பார்வையிட்ட முதல்வர் விஜய், சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவினருக்கு தனது பாராட்டு, வாழ்த்தைத் தெரிவித்தார். அனைத்து சட்டபூர்வ நடைமுறைகளும் நிறைவடைந்த பின்னர், திருமங்கை ஆழ்வார் வெண்கலச் சிலை, அதன் மூலக்கோயிலில் நடைமுறையிலுள்ள சமயச் சம்பிரதாயங்கள் மற்றும் வழிபாட்டு முறைகளின்படி பொதுமக்களின் வழிபாட்டுக்காக மீண்டும் நிறுவப்படும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடுவதை யாரும் தடுக்கவில்லை

உயர்நீதிமன்றம் கருத்து

சென்னை, ஆக. 18: தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை முதலில் பாடுவதை யாரும் தடுக்கவில்லை எனக் கருத்து தெரிவித்த சென்னை உயர்நீதிமன்றம், அரசு நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை முதலில் பாடமத்திய அரசு தகுந்த உத்தரவு பிறப்பிக்கக் கோரி, தொடரப்பட்ட வழக்கைத் தீர்ப்புக்காக ஒத்திவைத்தது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் அனன்யா ராதாகிருஷ்ணன் என்பவர் தாக்கல் செய்த பொதுநல மனுவில், தமிழகத்தில் அரசு நிகழ்ச்சிகள், தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடி தொடங்குவதும், தேசிய கீதம் இசைத்து நிறைவு செய்வதும் பல ஆண்டுகளாக மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த நடைமுறையை நீர்த்துப்போகச் செய்யும் வகையில், அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரமும், தேசிய கீதமும் பாடப்பட்ட பிறகே, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்படுகிறது. அரசு நிகழ்ச்சியை வந்தே மாதரம் பாடியே தொடங்க வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த ஜன. 28-ஆம் தேதி பிறப்பித்த சுற்றறிக்கையில், மாநிலப் பாடலைப் பாடி அரசு நிகழ்ச்சியைத் தொடங்க எந்தத் தடையும் விதிக்கவில்லை. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவது வெறும் சடங்கு அல்ல. அது தமிழர்களின் உணர்வு, கலாசாரம் மற்றும் அடையாளமாக உள்ளது.

எனவே, வந்தே மாதரம் பாடலை முதலில் பாட வலியுறுத்தி, மத்திய அரசு பிறப்பித்த சுற்றறிக்கையை ரத்து செய்ய வேண்டும். எதிர்காலத்தில் அரசு நிகழ்ச்சிகளில் இந்த கலாசார மோதலை தவிர்க்கும் வகையில், தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடுவதற்கு தகுந்த நிர்வாக அறிவுறுத்தல்களைப் பிறப்பிக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசுத் தரப்பில், உள்துறை அமைச்சகம் கடந்த ஜூலை 9-ஆம் தேதி புதிய அறிவிப்பாணையை வெளியிட்டது. அதன்படி, வந்தே மாதரம் அதன்பிறகு தேசிய கீதம் அடுத்தடுத்து பாடப்பட வேண்டும். அதாவது, முதலில் வந்தே மாதரம் பாடலையும் அதைத் தொடர்ந்து தேசிய கீதம் பாட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதில், மாநிலப் பாடல் குறித்து எதுவும் கூறப்படவில்லை. மாநிலப் பாடலை இறுதியாகத்தான் பாட வேண்டும் என்று கூறவில்லை என விளக்கம் அளிக்கப்பட்டது. இதையடுத்து, வழக்கை விசாரித்த நீதிபதி, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை முதலில் பாடுவதை யாரும் தடுக்கவில்லை. அதேபோன்று, முதலில் தேசியப் பாடலான வந்தே மாதரமும், இறுதியில் தேசிய கீதமும் பாட வேண்டும் என மத்திய அரசின் புதிய அறிவிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தான், சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்த சுதந்திர தினவிழாவில், முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து, அதைத் தொடர்ந்து வந்தே மாதரம் பின்னர், தேசிய கீதம் இசைக்கப்பட்டதாகக் கருத்து தெரிவித்து, இந்த வழக்கை தீர்ப்புக்காக ஒத்திவைத்தனர்.

7 பேரை எரித்துக் கொன்ற வழக்கில் இரு பெண்கள் உள்பட மூவருக்கு ஆயுள் சிறை

மதுரை, ஆக. 18: மதுரை மாவட்டம், சேடபட்டி அருகே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரை வீட்டுக்குள் வைத்து தீயிட்டு எரித்துக் கொன்ற வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இரு பெண்கள் உள்பட மூவருக்கு ஆயுள் சிறைத் தண்டனையும், ரூ. 45 ஆயிரம் அபராதமும் விதித்து, மதுரை 6-ஆவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டத்துக்குள்பட்ட குமாரபுரத்தைச் சேர்ந்தவர் கண்ணன். இவர் கடந்த 2013-ம் ஆண்டு அதே பகுதியைச் சேர்ந்த பரமேஸ்வரியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். திருமணத்துக்குப் பிறகு கண்ணன் தனது மனைவி பரமேஸ்வரியுடன் சேர்ந்து வாழ மறுத்ததாகக் கூறப்படுகிறது. இதனால், ஏற்பட்ட குடும்ப பிரச்னையை தொடர்ந்து, பரமேஸ்வரி தனது உறவினர்களான முருகேஸ்வரி, ராஜபாண்டி ஆகியோருடன் சேர்ந்து கண்ணனைக் கொலை செய்யத் திட்டமிட்டனர்.

இதையடுத்து, கடந்த 2015-ஆம் ஆண்டு மே 20-ஆம் தேதி அதிகாலை வீட்டில் தனது குடும்பத்தினருடன் தூங்கிக் கொண்டிருந்த கண்ணன், அவரது தந்தை வேலு, தாய் பேச்சியம்மாள், சுகன்யா, சங்கீதா, குழந்தைகள் சஞ்சித், வினித் என 7 பேரும் தீ வைத்து எரித்துக் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து சேடபட்டி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் கண்ணனின் மனைவி பரமேஸ்வரி, முருகேஸ்வரி, ராஜபாண்டி ஆகியோர் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டனர்.

இந்த வழக்கு மதுரை 6-ஆவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

வழக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில், மதுரை 6-ஆவது கூடுதல் மாவட்ட நீதிபதி (பொறுப்பு) உதயவேலவன் செவ்வாய்க்கிழமை அளித்த தீர்ப்பு:

பரமேஸ்வரி, முருகேஸ்வரி, ராஜபாண்டி ஆகியோர் மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டது. எனவே, இவர்கள் மூவருக்கும் தலா 8 ஆயுள் சிறைத் தண்டனையும், தலா ரூ. 45 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படுகிறது. இந்தத் தண்டனைகளை இவர்கள் ஏறகாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றார் நீதிபதி.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

மின்னணு – ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளியின் பெயர் மற்றும் எண்	ஒப்பந்த முன்வைப்புத் தொகை	தகுதி	மின்னணு ஒப்பந்தச் சமர்ப்பிப்பு இறுதி நேரம்	மின்னணு ஒப்பந்தம் திறக்கப்படும் நேரம்
1.	புதிய நிலவழி மிகைமின் நிலையத்தில் 750KVA மற்றும் ஜெனரேட்டர் கொடிமுறை பதிலாக 1010 KVA மற்றும் ஜெனரேட்டர் மின் தொகுதிகளை மாற்றம் மற்றும் அனுமலை II இல் உள்ள மலர் நகர் நிலையத்தில் தற்போதுள்ள 1MW ஜெனரேட்டர் மின் தொகுதியை மாற்றுதல் பணி மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. (WORKS) 200 மிமீ விட்டமுள்ள நெகிழ்திறம் பிரதிமை குடிநீர் குழாய்களை பதிக்கும் பணி. ஒப்பந்தப்புள்ளி எண்:3789/ 2026-27	ரூ. 87,900.00	வகுப்பு I,II & III மற்றும் அதற்கு மேல்	08.09.2026 அன்று மதியம் 3.00 மணி வரை	09.09.2026 அன்று மதியம் 3.00 மணிக்கும் பிறகு
2.	பகுதி VI, பணியாணை 73-இல் பெரியார் நகர் குடிநீர் நுகர்வு மதிப்பீடு வரியில் குடிமராமத்துப்பணிகளுக்கு கண்காட்சி நிதி குடிநீர் விநியோக நிலையத்திலிருந்து (WDS) 200 மிமீ விட்டமுள்ள நெகிழ்திறம் பிரதிமை குடிநீர் குழாய்களை பதிக்கும் பணி. ஒப்பந்தப்புள்ளி எண்:3788/ 2026-27	ரூ. 60,000/-	வகுப்பு I,II & III மற்றும் அதற்கு மேல்	08.09.2026 அன்று மதியம் 3.00 மணி வரை	09.09.2026 அன்று மதியம் 3.00 மணிக்கும் பிறகு
3	ஒப்பந்த முன்வைப்பு தொகையை இணையவழி பரிவர்த்தனைக இணையதளத்தில் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்ததாரர்கள் செலுத்தியதற்கான எவ்வித ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் ஒரு பகுதியாக சமர்ப்பிக்க வேண்டாம்.				
4	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இ-ஒப்பந்தங்கள் www.tntenders.gov.in இணையதளத்தில் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கவும். பிற அனைத்து விவரங்களையும் 20.08.2026 முதல் இணையதளத்தில் வெளியிடப்படும். ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் பார்வையிடவும்.				

செ.ம.தொ.இ(மு)/2606/ஒப்பந்தப்புள்ளி/2026 மேற்பார்வைபொறியாளர் (மூமக)(பொ)

கடையநல்லூர் நகராட்சி
தென்காசி மாவட்டம்

ந.க.எண். 907/2023/இ1 நாள்.17.08.2026

இரண்டு உறை குறுமையான முறையில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கடையநல்லூர் நகராட்சியில் பெருந்தலைவர் காமராஜர் சாலை உணவுத்துறை பகுதிகளில் உள்ள அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 01 முதல் 08 வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு தயார் செய்து விநியோகம் செய்யும் பணிக்கான மேற்கொள்ள கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் அவர்களால் இரண்டு உறைகள் இணையான வாயிலாக மட்டுமே குறுமையான முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. பணியின் மதிப்பு : ரூ.237.00 லட்சம்.
2. முன்வைப்புத் தொகை : பணியின் மதிப்பீட்டில் 1 %.
3. ஒப்பந்தப்புள்ளி தரவாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து 20.08.2026 அன்று காலை முதல் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
4. பெருமான நேரம் மற்றும் நாள்

அ)	ஒப்பந்தப்புள்ளிகளை முன்வைத்தல்வுக்கட்டம்	:	–
ஆ)	ஒப்பந்த நகலை இறக்கம் செய்வதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்	:	28.08.2026ம் தேதி
இ)	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்	:	வெள்ளிக்கிழமை மாலை 03.00 மணி வரை
ஈ)	தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறந்தல்	:	28.08.2026ம் தேதி மாலை 03.30

5. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.
6. எதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.

செ.ம.தொ.இ/2600/ஒப்பந்தப்புள்ளி/2026

சுவாதீன (POSSESSION) அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (54/2002) (மேற்படி 'சட்டம்') இங்கு காணும் Arcil-Trust-2026-007' ("Arcil")-ன் டிரஸ்டி என்ற அளவில் செயல்படும் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்-ன் கீழே கையொப்பமிட்டுள்ளவர் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிற படியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குக் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் (மேற்படி 'விதிகள்') தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன் எண் FEDTRUSTLO500099 தொடர்பாக கடன்தாரர்கள்: தங்கமாரி C, கற்பகவல்லி, ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் அவர்களுக்கு 15/09/2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி அது கிடைத்த 60 நாட்களுக்குள் அதில் காணும் 13.08.2025 அன்றுள்ளபடியான கடன் பாக்கியை ரூ.16,95,840.88/- (ரூபாய் பதினாறு லட்சத்து தொண்ணூற்றைந்தாயிரத்து எண்ணூற்று நாற்பது மற்றும் எண்பத்தெட்டு பைசா மட்டும்) மற்றும் 14.08.2025 முதல் தொகை வசூலிக்கப்படும் / செலுத்தப்படும் வரை ஒப்பந்த விகிதத்தில் அமைந்த வட்டி சேர்த்து செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13 உப்பிரிவு (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகளை 14 ஆகஸ்ட் 2026 அன்று இங்கு கையொப்பமிட்டுள்ளவர் தமது சுவாதீனத்தில் (POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ / நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது, ARCIL-க்குச் செலுத்தவேண்டிய 02.07.2026 தேதியில் உள்ளபடியான கடன் பாக்கி ரூ.20,12,512 (ரூபாய் இருபது லட்சத்து பன்னிரண்டாயிரத்து ஐந்நூற்று பன்னிரண்டு மட்டும்) மற்றும் 03.07.2026 முதல் தொகை வசூலிக்கப்படும் / செலுத்தப்படும் வரை ஒப்பந்த விகிதத்தில் அமைந்த வட்டி, எதிர்பாரா செலவுகள், செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்கள் சேர்த்து முழுவதுமாக செலுத்தவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13 உப்பிரிவு (8)-ன் வரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடனுக்கு ஈடான சொத்து விவரம் (சொத்து விவரம்)

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி பதிவு மாவட்டம், பேட்டை சார் பதிவாளர் அலுவலக எல்லை, திருநெல்வேலி வட்டம், வேலர்குளம் கிராமம், சீதபற்பநல்லூர் ஊராட்சி ஒன்றியம் நத்தம் சர்வே எண் 20/31 பகுதி நிலத்தின் அளவீடுகள்: வடக்கு - கிழக்கு மேற்காக 24.27 அடி, தெற்கு - கிழக்கு மேற்காக 32.8 அடி, கிழக்கு - தெற்கு வடக்காக 139.07 அடி, மேற்கு - தெற்கு வடக்காக 127.92 அடி - ஆக மொத்தம் 3809.279825 சதுர அடி பரப்பளவுள்ள மனை இது 353.89 சதுர மீட்டருக்கு சமம் (8.74 சென்ட் நிலம்) மற்றும் வீட்டுக் கதவு எண் 5/120 எல்லைகள்: வடக்கு - கிழக்கு மேற்கு தெரு; தெற்கு- காலி மனை; கிழக்கு- காலி மனை; மேற்கு- மாயாண்டி தேவர் சொத்து.

இடம்: தமிழ்நாடு
நாள்: 14/08/2026

ஒம்/ அதிகாரபூர்வ அலுவலர்
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.க்காக
(Trustee of Arcil-Trust-2026-007)

அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்
(CIN) எண்: CIN-U65999MH2002PLC134884.
இணையத்தளம்: www.arcil.co.in
பதிவு அலுவலகம்: தி ரூபி, 10 ஆவது தளம், 29 சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை - 400 028. தொ.பே.: 022 - 66581300

யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா
ரீஜியனல் ஆபீஸ் : திருவனந்தபுரம்
யூனியன் பாங்க் பவன், எம்.ஜி.ரோடு, வஞ்சியூர், திருவனந்தபுரம்-695001

அசையா சொத்துக்களின் இ - ஏல விற்பனை நோட்டீஸ்

அசையா சொத்தினை விற்பதற்கு செக்யூரிடைஸேஷன் அண்ட் ரீ கன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்ஷியல் அசெட்ஸ் அண்ட் என்போர்ஸ்மென்ட் ஆஃப் செக்யூரிடி இன்டரஸ்ட் ஆக்ட், 2002 ரூல் 8 (6) ஆஃப் தி செக்யூரிடி இன்டரஸ்ட் (என்போர்ஸ்மென்ட்) ரூல்ஸ் 2002 ன் படி இ-ஏலம் விற்பனை நோட்டீஸ்.

இந்த நோட்டீஸ் பொது மக்களுக்கும் முக்கியமாக கடன்காரர்கள் மற்றும் ஜாமீயக்காரர்கள் தெரியப்படுத்துவது என்னவென்றால் கீழே விவரிக்கப்பட்டு இருக்கும் அசையா சொத்துகள் **யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா** லெக்யூர்டு கிரெடிட்டர் கடன் வழங்கியவர் சம்பந்தப்பட்ட அதிகாரி அதை கையகப்படுத்தி கடன் வழங்கியவர் என்ற நிலையில் எங்கே என்பது போல, என்ன என்பது போல, எது இருப்பது போல அடிப்படையில் **10-09-2026** அன்று சம்பந்தப்பட்ட நிலுவை தொகை மற்றும் செலவு வரப்போகும் வட்டி முதலியவைகளை **யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா** கீழே கொல்கின்ற முறையில் ஈடாக்கப்படும்.

கிளையின் பெயரும் முகவரியும் தொடர்பு கொள்ளவேண்டிய எண்ணும்	**யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, பிரப்பன்கோடு கிளை** பிரப்பன்கோடு, திருவனந்தபுரம், கேரளம்-695607 **MOB: 9744719694 / அதிகாரப்பட்ட அதிகாரி 7259040031**
கடன்காரர்/ஜாமீயக்காரர் பெயர்	**M/s. ஆல்ஃபா வெட்டிங் சென்டர்** பங்குதாரர்கள் நடத்தும் நிறுவனத்தின் பங்குதாரர்களான **திரு. ரமேஷ் குமார்.சி & குமாரி. சுரேக.டி** கதவு எண். NP6/155, வாமனபுரம், வெஞ்ஞாரமூடு பி.ஒ., திருவனந்தபுரம்-695607. **குமாரி. சுரேக.டி** M/s. ஆல்ஃபா வெட்டிங் சென்டர் பங்குதாரர், அனகா காவரா, வெஞ்ஞாரமூடு, நெல்வநாடு, திருவனந்தபுரம்-695607, **திரு.ரமேஷ்குமார்.சி** M/s. ஆல்ஃபா வெட்டிங் சென்டர் பங்குதாரர், அனகா காவரா, வெஞ்ஞாரமூடு, நெல்வநாடு, திருவனந்தபுரம்-695607, ஜாமீயக்காரர் **திருமதி. ஜி. கமலாபாய் என்ற கமலாபாய்ஞானசுந்தரம்** வீடு எண்.681, 2-வது குறுக்கு தெரு, ஆசாரிப்பள்ளம் ரோடு, நேசமணி நகர், நாகர்கோவில், கன்னியாகுமரி, தமிழ்நாடு-629001, **திரு.ரமேஷ்குமார்.சி** அனகா காவரா, வெஞ்ஞாரமூடு, நெல்வநாடு, திருவனந்தபுரம்-695607, **குமாரி. சுரேக.டி** அனகா காவரா, வெஞ்ஞாரமூடு, நெல்வநாடு, திருவனந்தபுரம்-695607
செலுத்த வேண்டிய தொகை	**ரூ.3,42,19,099.00** (மூன்று கோடி பதினாறு லட்சத்து நாற்பத்தெட்டாயிரத்தி எண்ணூற்றி இருபத்தொன்பது ரூபாய் தொண்ணூற்றி நான்கு பைசா) **(as on 06.08.2026)** + முதல் நடைமுறைக்கு வரும் தேதி வரை கூடுதல் வட்டி மற்றும் செலவுகளும்.
அசையா சொத்தின் விவரம் : தமிழ்நாடு, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், அகஸ்தீஸ்வரம் தாலுக்கில், நீண்டகரை எ கிழக்கு வில்வேஜில், ஆசாரிப்பள்ளம் ரோடு, சீசர்வே எண் H-1/12-11A subdivided as H-1/12-11A 1B present Town Survey No H2/20 ல் **திருமதி. ஜி. கமலாபாய் என்ற கமலாபாய் ஞானசுந்தரம்** பெயரில் இருக்கும் 10.50 சென்ட் இடமும் அதிலுள்ள Door No. 23/5D கட்டிடமும் எல்லை சொத்துக்களும். **எல்லை** : கிழக்கு - தங்கமணி வகை சொத்து, தெற்கு- கிழக்கு மேற்காக உள்ள பாதை, மேற்கு - சகீலா ராணி வகை Plot No.70, வடக்கு - ராஜபாதை சாலை	
சொத்து தொடர்பான விவரங்க விவரங்கள் ஏதேனும் இருந்தால்	இல்லை. (இன்டென்டிங் ஏலதாரர்கள் ஏலத்தை சமர்ப்பிக்கும் முன் **EC** ஐ சரிபார்த்து தங்களை திருப்திப்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்)
இருப்பு விலை	ரூ.1,88,73,000.00 (இரண்டு கோடியே ஒன்பது லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)
ஏலம் அதிகரிப்பு	ரூ.1,88,730/- (ஒரு லட்சம்)
EMD	இருப்பு விலையின் 10%

இ-ஏலம் தேதி, நேரம்: 10-09-2026, 12.00 P.M முதல் 05.00 P.M வரை (with 10 minutes unlimited auto extensions) E-auction, website : https://baanknet.com

விற்பனை சம்பந்தமான விரிவான விவரங்களும் நிபந்தனைகளும் தெரிந்து கொள்ள : **PH: 8291220220 & email ID: support.baanknet@psballiance.com** பதிவு லோகின் மற்றும் ஏல விதிகளுக்கு **https://baanknet.com and https://www.unionbankofindia.co.in/auction-property/view-auction-property.aspx** என்ற இணையதளத்தை பார்க்கவும். ஏல சம்பந்தமான விரிவான விவரங்கள் தெரிந்து கொள்ள : **sarfaesi@unionbankofindia.bank or support. baanknet.com** அல்லது தலைமை மேலாளர், ரீஜியனல் ஆபீஸ், முதல் தளம், ஸ்டார்ச்யு, திருவனந்தபுரம் - 695 001, போன்: **9739806668, 9495590047**

மேற்கண்ட தேதியில் மின் - ஏல விற்பனையை நடத்துவது குறித்து கடன் வாங்கியவர் மற்றும் குறிப்பிட்ட கடனுக்கான உத்தரவாததாரர்களுக்கு பாதுகாப்பு வட